சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம், பேன்பேட், நந்தனம்,
சென்னை - 600 035. தொலைபேசி எண்.044-29515580

**ஆணை நாள் 15.06.2022**

**முன்னிலை**

**திரு மு.ஸ்ரீதர், பி.டெக்.,**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். SA6485/C/2022**

திரு N. காளீஸ்வரன் — மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம். — பொது அதிகார அமைப்பு

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச்சட்டம் பிரிவு 6(1)கீழ் மனுசெய்த நாள் | 10.11.2021 |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | 29.03.2022 |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | 06.04.2022 |
| ஆணையத்தின் அறிவிப்பு நாள் | 09.05.2022 |

******

**ஆணை**

இன்று (15.06.2022) முற்பகலில் வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திரு N. காளீஸ்வரன் நேரடியாக ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பாக மேல்முறையீட்டு அலுவலர் திருமதி பெரியநாயகி, வட்டாட்சியர், குளத்தூர் மற்றும் திரு தமிழ்மணி, வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம் ஆகியோர் தொலைபேசி வாயிலாக பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 10.11.2021 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் மாத்தூர் ஊராட்சி, சிதம்பர நகரில் தனி மனிதர்களால் பள்ளி மைதானம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது குறித்த தகவல்களை 5 இனங்களில் குறிப்பிட்டு வழங்கக்கேட்டு, வட்டாட்சியர், குளத்தூர், கீரனூர் என விலாசமிட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலரால் தான் கோரிய தகவல் வழங்கப்படாததால் மேல்முறையீட்டாளர் 29.03.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கும், 06.04.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்கும் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டாளரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு இன்று (15.06.2022) விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

4. இன்றைய விசாரணையின்போது ஆஜரான பொதுத் தகவல் அலுவலர், மேல்முறையீட்டாளர் கோரும் தகவல்கள் குறித்து உரிய நடவடிக்கை மேற்கொண்டு வழங்கக்கூடிய தகவல்கள் அனைத்தையும் ஆணைய உத்தரவின் அடிப்படையில் வழங்குவதாகத் தெரிவித்தார்.

5. இதுகுறித்து விசாரணையின்போது ஆஜரான மேல்முறையீட்டாளர், மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு குறித்து O.S.83/2009 கீரனூர் முன்சீப் கோர்ட் மற்றும் மதுரை உயர்நீதிமன்ற உத்தரவுகளின் பேரில் ஆக்கிரமிப்பை அகற்ற வருவாய் ஆய்வாளர் மூலம் குழு அமைத்துள்ளதாக தெரிவித்துள்ள வட்டாட்சியரின் வாக்குமூலத்தில், “தனி நபரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடமான பள்ளி மைதானம் தென்னக ரயில்வேக்கு உரிய இடம் என்றும், தென்னக ரயில்வே அனுமதியளித்தால் ஆக்கிரமிப்பு அகற்றப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும்” சுமார் 13 வருடங்களாக தனி நபர்களால் ஆக்கிரமிப்பில் உள்ள பள்ளி மைதான ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டு, உரிய தகவல் வழங்குமாறு ஆணையத்தைக் கேட்டுக்கொண்டார். இதனை ஆணையம் பதிவு செய்து, விசாரணையின் முடிவில் கீழ்க்கண்ட உத்திரவு பிறப்பிக்கப்படுகின்றது:

1) **இவ்வாணை கிடைக்கப்பெற்ற 30 தினங்களுக்குள் மேல்முறையீட்டாளருக்கு அறிவிப்புக் கடிதமொன்றை அனுப்பி, அலுவலக வேலைநாளில், வேலைநேரத்தில், இதர அலுவலகப் பணிகளுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அலுவலகம் வரவழைத்து, மேல்முறையீட்டாளர் தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன் கீழ் தாக்கல் செய்துள்ள 10.11.2021 தேதியிட்ட மனுவில் கோரியுள்ள மாத்தூர் ஊராட்சி, சிதம்பர நகரில் தனி மனிதர்களால் பள்ளி மைதானம் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது குறித்து வருவாய் கோட்டாட்சியர் தலைமையில், மேல்முறையீட்டாளருடன் தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர், குளத்தூர், வருவாய் கோட்டாட்சியரின் நேர்முக உதவியாளர், இலுப்பூர், வட்டார வளர்ச்சி அலுவலர், விராலிமலை மற்றும் காவல் ஆய்வாளர், மாத்தூர் ஆகியோர் இதுகுறித்து உரிய விசாரணை மேற்கொண்டு மாத்தூர் ஊராட்சி, சிதம்பர நகரில் தனி மனிதர்களால் பள்ளி மைதானம் ஆக்கிரமிப்பு செய்துள்ளது குறித்து ஆய்வு மேற்கொண்டு, மேற்குறிப்பிட்டுள்ள இடம் அரசு நிலமாக இருப்பின் ஆக்கிரமிப்பை அகற்ற நடவடிக்கை மேற்கொண்டு இதுகுறித்து அனைத்து ஆவணங்களையும் மனுதாரருக்கு ஒளி நகலெடுத்து, சான்றொப்பமிட்டு, தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 7(6)-ன் கீழ் கட்டணம் ஏதுமின்றி 100 பக்கங்களுக்கு மிகாமல் வழங்கி, அதனை அவர் பெற்று ஏற்பளிப்பு செய்த விபரத்தை அறிக்கையாக இவ்வாணை கிடைக்கப்பெற்ற 45 தினங்களுக்குள் ஆணையத்திற்குச் சமர்ப்பிக்குமாறு பொதுத் தகவல் அலுவலருக்கு உத்திரவிடப்படுகிறது.**

2) **மேலும், மேற்படி உத்திரவிற்கிணங்க பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்கத் தவறும் பட்சத்தில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005, பிரிவு 20(1) மற்றும் பிரிவு 19(8)(b) ஆகியவற்றின் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவுறுத்தப்படுகிறது.**

**ஒம்/- மு.ஸ்ரீதர்**
**மாநில தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**பிரிவு அலுவலர்/ பிரிவுப் பதிவாளர்**

**வழக்கு எண். SA6485/C/2022**
**பெறுநர்**
**பொது அதிகார அமைப்பு**

வருவாய் கோட்டாட்சியர்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்,
இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம்.

மேல்முறையீட்டு அலுவலர்/
வட்டாட்சியர், வட்டாட்சியர் அலுவலகம்,
குளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
குளத்தூர், புதுக்கோட்டை மாவட்டம்.

பொதுத் தகவல் அலுவலர்/
வருவாய் கோட்ட அலுவலரின் நேர்முக உதவியாளர்,
இலுப்பூர், புதுக்கோட்டை மாவட்டம்.

வட்டார வளர்ச்சி அலுவலர்,
வட்டார வளர்ச்சி அலுவலகம்,
விராலிமலை, புதுக்கோட்டை மாவட்டம்.

காவல் ஆய்வாளர்,
மாத்தூர், புதுக்கோட்டை மாவட்டம்.

**மனுதாரர்**

திரு N. காளீஸ்வரன்,
சிதம்பர நகர் குடியிருப்போர் நலச்சங்கம்,
சிதம்பர நகர், மாத்தூர் வட்டம்,
புதுக்கோட்டை மாவட்டம் - 622 515.

Copy to : Judgement file
AM/PS - 150622